உதகை நகர தி.மு.க. சார்பில் தமிழர் திருநாள் தை பொங்கலை முன்னிட்டு, உதகை நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் ஏற்பாட்டில் கலைஞர் அறிவாலயத்தில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து டம்ளர் மொடக்கு பகுதியில் பயணிகள் நிழற்குடை திறந்து வைக்கப்பட்டது. இதில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு கொறாடா கா.இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகனின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் கவன்சிலர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

அயலக தமிழர் தினம் 2025 விழா சென்னை நந்தனம் வர்த்தக மையத்தில்நடைபெற்றது. இவ் விழாவில் சவுதி அரேபியா அயலக தி.மு.க .அணி பாடல்அடங்கிய ஆடியோ வெளீயீடு செய்யப்பட்டது. இப்பாடலை சவுதி அரேபியா கிழக்கு மண்டலம் அயலக அணி மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் தயாரித்துள்ளனர். கவிஞர் நாகூர் பாரி எழுதி கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் இப் பாடலை பாடியுள்ளார். இந்த பாடலடங்கிய ஆடியோவை தமிழக கல்விதுறை அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி வெளியிட டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., புதுகோட்டை அப்துல்லா எம்.பி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் அயலக தமிழர் நலவாரியம் தலைவர் கார்த்திகேய சேனாதிபதி முன்னிலை வகித்தார். இதில் சவுதி அரேபிய ,சென்னை அயலக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில்

சைதை கிழக்கு பகுதி 172, 172 'அ' வட்ட கழகத்தினர்களுக்கு புத்தாடைகள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜன. 13 - தை திங்கள் தமிழ் புத் தாண்டு பொங்கல் விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 மற்றும் 172அ வட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், அணிக ளின் நிர்வாகிகள், மற்றும் முன்னோடிகளுக்கு புத்தா டைகள் வழங்கும் விழா இன்று (13.01.2025 திங்கட் கிழமை) காலை 9.00 மணிக்கு கிண்டி மடுவின் கரை சக்ரபாணி சாலையில் உள்ள சமூக நலக் கூடத்தில் வைத்து சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது மண்டலக்குழு தலைவர் இரா.துரைராஜ் தலைமை யில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்ட செயலா ளர் மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் புத்தாடைகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

கழக தலைவர் முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் பொற்கால ஆட்சியில் வருகிற தை 1 தைத்திருநாள் தமிழ் புத்தாண்டு பொங்கல் விழாவை சிறப்பிக்கும் வகையில் இன்று 13.01.2025 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு 172வது வட் டம் கிண்டி மடுவின்கரை சக்ரபாணி சாலையில் உள்ள சமூக நலக் கூடத்தில் வைத்து சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் தலைமை யில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 172 வது வட்டம் மற்றும் 172அ வட்டத்தில் உள்ள கழக நிர் வாகிகள் அணிகளின் நிர்வா கிகள் மற்றும் முன்னோடி கள் அனைவருக்கும் புத்தா டைகள் வழங்கி சிறப்புறை நிகழ்த்துகிறார்

எனவே சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர் வாகிகள், அணிகளின் நிர் வாகிகள், முன்னோடிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண் டும் என இரா.துரைராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

'நம்ம எக்மோர்' உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்த

500 விளையாட்டு வீரர்களுக்குப் பொங்கல் பரிசு!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.13- தமிழ்ப் புத்தாண்டு மற் றும் தைப் பொங்கலை முன் னிட்டு, எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலை, மாநகராட்சி சமூக நலக் கூடத்தில் நடந்த பொங்கல் பரிசு வழங்கும் விழாவில், கழகச் சட்டத் துறை இணைச் செயலாள ரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறி ஞர் இ.பரந்தாமன், நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டா லின் ஸ்போர்ட்ஸ் கிளப் பைச் சேர்ந்த 500 விளை யாட்டு வீரர்களுக்கு டி ஷர்ட், டிராக் பேண்ட், நாட்காட்டி உள்ளிட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜய குமார், முன்னாள் மாவட் டப் பிரதிநிதி புரசை எஸ். குமார், அவைத் தலைவர் வெ.மருதன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையர சன், மாவட்டப் பிரதிநிதி கமலக்கண்ணன், 108வது வட்டத் துணைச் செயலா ளர் கே.சீனிவாசன், எழும் பூர் தெற்குப் பகுதி வர்த்த கர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், எழும் பூர் தெற்குப் பகுதி இளை ஞர் அணி துணை அமைப் பாளர் ஜெ.சிலம்பரசன், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் பி.முத்து லெட்சுமி, 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், 108வது இளை ஞரணி துணை அமைப்பா ளர் ஜோ.சந்தோஷ்குமார், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல். சுகுமாரன், தலைமைக் கழ கப் பேச்சாளர் எம்.இ.தேவ நிதி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பா ளர் பி.எம்.ஜெயலெட்சுமி, பாக முகவர்கள் ஜி.பிரவீண் குமார், கவிதா மற்றும் ஆர். வேலு, கி.புஷ்பராஜ், எட்டு என்கிற விஜயகுமார், பிரம் மதேவன், ஜெ.எல்.குணசே கர், சத்யகலா, வீ.நாகராஜ், விஜய தேவராஜ், ஜெ.சரவ ணன், எஸ்.கண்ணன், எம். சரண்குமார், கே.தியாகு, கென்னடி உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்க ளும் கலந்து கொண்டனர்.

திருச்சி (கிழக்கு) தொகுதியில் – புதிதாக கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகள்!

குறைந்த வருவாய் பிரிவு மக்கள் பயனடைய வழிவகை உண்டா?

சட்டப்பேரவையில் இனிகோ இருதயராஜ் கேள்வி!

சென்னை, ஜன.13- சட்டப்பேரவையில் திருச்சி கிழக்குத் தொகுதி வேட்பாளர் இனிகோ இரு தயராஜ் எழுப்பிய கேள்வி யும் அதற்கு அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதி லும் வருமாறு :-

முனைவர் த. இனிகோ இருத யராஜ்: திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதிக்குட் பட்ட 59 ஆவது வார்டு, கல் லுக்குழி செங்குளம் காலனி பகுதியில் பழுதடைந்த குடி யிருப்புகளுக்கு மாற்றாக, புதிய அடுக்குமாடிக் குடியி ருப்புகள் கட்டப்படுவதா கச் சொல்கிறார்கள். அதில் கூடுதலாக இரண்டு மாடி கள் கட்டி, குறைந்த வரு வாய் பிரிவுLow Income Group (LIG), Middle Income Group (MIG) என்று பிரித்துக் கொடுத்தால், அந்தக் குடியி ருப்புகள் மக்கள் பயனடை வதற்கு வசதியாக இருக் கும். எனவே, அதற்கு வழிவகையிருக்கிறதா என் பதை தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் சு.முத்துசாமி: நான் ஏற்கெனவே சொன்ன துதான். 30, 40 ஆண்டுக ளுக்கு முன்னர் கட்டப் பட்ட கட்டடங்களுக்கு, அன்றைக்கு இருந்த FSI அள வானது தற்போது உயர்த் தப்பட்டிருக்கிறது. எனவே, நான் முன்னர் சொன்னது போன்று, 100 வீடுகள் இருக் கிற இடத்தில், தற்போது 300 வீடுகள் கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. அவ் வாறு கட்டினால், அதற் கேற்ப கேட்பு இருக்குமா, விலை போகுமா என்பதை யும் நாம் பார்க்க வேண் டும். அதற்குக் காரணம் என் னவெனில், திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்றபோது, ஏறத் தாழ 6,293 வீடுகள் விற்கப் படாமல் இருந்தன. அவை கட்டப்பட்டு, நீண்ட நாட் களாக விற்கப்படாமல், பயன்படுத்தப்படாமல் இருந்தன. அதற்கென தனி முயற்சி எடுத்து, அதில் 2,512 வீடுகள் விற்கப்பட்டி ருக்கின்றன. மீதமுள்ள விற் கப்படாத வீடுகளை வாடகை வீடுகளாக மாற்று வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை கள் இருக்கிற காரணத்தால், இனிமேல் வருகிற திட்டங் களை, பொதுமக்கள் உடன டியாக பெற்றுக்கொள்கிற ஒரு சூழ்நிலை இருக்க வேண்டுமென்பதை ஆய்வு செய்வதில் சற்று காலதாம தம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, போதிய கேட்பு இருந்தால், நிச்சயமாக உறுப் பினர் அவர்கள் கோரிய அந் தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் படும்.

அதுமட்டுமல்ல; ஒரு கட் டடம் கட்டுகிறபோது, அங் குள்ள roadன் அகலத்தைப் பொறுத்து அதில் எவ்வளவு FSI பயன்படுத்த முடியுமோ, அதை முழுமையாகப் பயன் படுத்த வேண்டும்; இல்லை யென்றால், அந்த இடம் வீணடிக்கப்படுவதாக அர்த் தம். எனவே, அதை முழு மையாகப் பயன்படுத்த நட வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் திமுக சார்பில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்ட கழக செயலாளர் பொன் கௌதம சிகாமணி முன்னிலையில், நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமையில் எழும்பூர் மோ.கோபிநாத் பேசினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற தலைவர்.திருமதி. அஞ்சுகம் கணேசன், ஒன்றிய கழக செயலாளர் சு.விஸ்வநாதன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர். க.ஜோதி, வரவேற்றார். மாவட்டக் கழக ஒன்றியக் கழக நகரக் கழக பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இரா. கிருஷ்ணராஜ் நன்றி கூறினார்.

ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

திரு.வி.க. நகர் தொகுதியில் பொங்கல் விழா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசு வழங்கினார்!

சென்னை,ஜன.13- சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் தமிழர் திருநாளாம் பொங் கல் திருநாளை கொண்டா டும் வகையில் (12.01.2025) நேற்று புளியந்தோப்பு அம் பேத்கர் சாலையில் அமைந் துள்ள திரு.வி.க. நகர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவல கத்தில் பொங்கல் விழாவை யொட்டி கழக நிர்வாகி க ளுக்கு வேட்டி, சட்டை, புடவை, மற்றும் நாட் காட்டி மற்றும் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடை பெற இருக்கிறது.

திரு.வி.க நகர் சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு பகு தியில் 71, 71(அ) 72, 72(அ), 73, 73(அ), 74, 74(அ), 75, 75(அ), 76,76(அ) ஆகிய அனைத்து வட்டங்களிலும் உள்ள பகுதிக்ககழக நிர்வா கிகள், வட்டக் கழக நிர்வா கிகள், மாவட்ட கழக நிர் வாகிகள், அனைத்து அணி களின் மாவட்ட அமைப்பா ளர்கள் மற்றும் துணை அ மை ப் பா ள ர் க ள் , அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற் றும் துணை அமைப்பாளர் கள் மற்றும் அனைத்து பாக முகவர்கள் ஆகியோருக்கு பொங்கல் பரிசினை கழக துணை அமைப்பு செயலா ளர் திரு.வி.க நகர் சட்ட மன்ற உறுப்பினர் வழக்கறி ஞர் ப.தாயகம்கவி ஏற்பாட் டில் இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் பி.கே சேகர்பாபு வழங்குகினார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் சென்னை மாநகர மேயர் பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. பகுதி கழக செயலாளர்கள் செ. தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, தலைமை கழக தேர்தல் பார்வையாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி மண்டலகுழு தலைவர் சரி தாமகேஷ்குமார், மாநக ராட்சி மாமன்ற உறுப்பினர் கள் எம்.சரவணன், புனித வதி எத்திராசன், தமிழ்செல் விசசிகுமார், ரமணிலோ கேஷ், இசட்.ஆசாத், டி. லோகேஷ், ந.துலுக்கானம், லயன்பி.உதயசங்கர், பி.ஜெ. துளசிங்கம், எம்.பெரோஸ் கான், பெரம்பூர் ஆர்.மகேஷ்

மற்றும் வட்டகழக செய லாளர்கள் : பரிமளாசுரேஷ் பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபாய், எம்.தமீம், பொல்லு டி.சுரேஷ்குமார், எஸ்.புஷ் பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்க டேசன், வி.கே.வெங்கடே சன், வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் : தில்லை கதிர வன், பெரம்பூர் ஆர்.ராஜன், புல்லட் கி.ரமேஷ், புவன வதி, கிணார் ஆறுமுகம், தெற்கு பகுதி கழக நிர்வாகி கள் : கோவிந்தன் த.கருணா நிதி, சுகுமார், வனஜா சண் முகம், அ.கருணாநிதி பகுதி இளைஞர் அணி அமைப்பா ளர்கள் : சே.மணிமாறன், பா.பி.தாஸ்,

உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பிர திநிதிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து பாக முக வர்கள் பங்கேற்கின்றனர்.

எம்.கே.ஜெய் – ஷெர்லி ஜெய் தலைமை! மடிப்பாக்கம்

187வது வட்டத்தில் பொங்கல் பரிசுப் பொருட்கள் வழங்கல்!

எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. – எஸ்.வி.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

சென்னை, ஜன.13- சென்னை தெற்கு மாவட்டம் - சோழிங்கநல் லூர் மேற்குப் பகுதி, மடிப் பாக்கம் 187வது வட்ட தி.மு.க. சார்பில் சமத்துவ பொங்கல் விழா பொதுமக் களுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கும் விழா நேற்று (12.1.2025- ஞாயிறு) காலை 9 மணியளவில் மடிப்பாக் கம் நியூ குபேரன் 6வது தெருவில் நடைபெறுகிறது. இவ்விழாவிற்கு வட்டச் செயலாளர் எம்.கே.ஜெய், மாமன்ற உறுப்பினர் ஷெர்லி ஜெய் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் எஸ்.அர விந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் எஸ். வி.ரவிச்சந்திரன், எம்.கே. ராமகிருஷ்ணன், ஆர்.மகா லிங்கம், பி.திலகவதி, எஸ். ஹரிஹரன், தேவி கமல், பி.ரமேஷ், சி.நூர்க்கப் பிள்ளை, என்.ஆர்.சீனிவா சன், ஆர்.தியாளன், என். வி.ஆனந்த குமார், எம்.நீதி ராஜ், ஏ.ஈஸ்வரமூர்த்தி, பி.ஜெயகுமார், எஸ்.அரி கிருஷ்ணன், கே.பிரபு, கே. திருக்குறளார், டி.ஹயானா, அ.அருண்குமார், ஆர். ரமேஷ், எம்.இந்திரா, கே. சுரேஷ், ஆர்.லோகநாதன், வி.சந்திரன், எஸ்.கிறிஸ்டி, ஜெ.தர்மா, பி.பார்த்தசாரதி (எ) பாலாஜி, கிஷோர், எம். உதயநிதி, த.ஏகாம்பரம், எஸ்.மகாலட்சுமி, ஆர்.பூர் ணசந்தர், ஆர்.பிரபாகரன், விவேக், ஏ.தியாகராஜன், ஆர்.பிரகாஷ், பி.பிரதீப் உள்ளிட்ட கழக நிர்வாகி கள், மகளிர் அணியினர், வட்டக் கழக செயல்வீரர் கள் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் தொகுதி புண்டி மேற்கு ஒன்றியம் பட்டரை பெரும்புதூர் ஊராட்சி, நாராயணபுரம் கிராமத்தில் பொதுமக்களின் கோரிக்கை அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 7.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டடம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா. மோதிலால், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், ஒன்றிய கழக நிர்வாகிகள் காஞ்சிப்பாடி பி. சரவணன், தேவேந்திரன், அ.ஆனந்தராஜ், நடராஜன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தனசேகர், எழிலரசன், ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் சுபாஷினி பாஸ்கரன் உள்ளிட்ட கிளைக் கழக நிர்வாகிகள் லோகநாதன் கஜேந்திரன், இன்பநாதன் வனஜா குமார் சுப்பிரமணி உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.